
**அக்டோபர் – 01**

# TNPSC துளிகள்

- துபாய் உலக தானியக்கப் போக்குவரத்து மாநாட்டில் ஐக்கிய அரபு அமீரகமானது தனது முதல் சாவரைன் மொபிலிட்டி மேகக் கணிம அமைப்பினை வெளியிட்டது.
- மைசூரு பகுதியைச் சேர்ந்த மூத்தப் பத்திரிகையாளர் அம்சி பிரசன்னகுமார், 2025 ஆம் ஆண்டு ஹோம்பலே சம்ஹிதா ஹரிணிகுமார் முன்னாள் மாணவர் கிரிஷி மீடியா விருதிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- பூடானின் முதல் இரயில்வே இணைப்பானது இந்தியாவிற்கும் பூடானுக்கும் இடையிலான 69 கிலோ மீட்டர் கோக்ரஜார்-கெலேபு இரயில் பாதையானது, 1989 ஆம் ஆண்டு இரயில்வே சட்டத்தின் கீழ் ஒரு சிறப்பு இரயில் திட்டமாக நியமிக்கப் பட்டு உள்ளது.
- 40 பேர் உயிரிழந்த TVK பேரணியில் ஏற்பட்ட நெரிசல் சம்பவம் குறித்து ஓர் உறுப்பினர் கொண்ட குழு விசாரணைக்குத் தலைமை தாங்க நீதிபதி அருணா ஜெகதீசனை தமிழக அரசு நியமித்தது.
- இந்தியத் தாவரவியல் ஆய்வு மையத்தின் (BSI) 13வது இயக்குநராக கனத் தாஸ் நியமிக்கப் பட்டுள்ளார்.
  - சுற்றுச்சூழல், வன மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் (MoEFCC) கீழ் உள்ள முதன்மையான ஆராய்ச்சி நிறுவனத்தினை வழிநடத்தும் முதல் பூஞ்சையியல் வல்லுநர் இவரே ஆவார்.

# தேசியச் செய்திகள்

## புதிய எரிசக்தி திட்டங்கள் 2025




- மஹி பன்ஸ்வாரா இராஜஸ்தான் அணுமின் நிலையத்திற்கு (MBRAPP) பிரதமர் அடிக்கல்

நாட்டினார்.

- சுமார் 42,000 கோடி ரூபாய் முதலீட்டை கொண்ட இந்தத் திட்டத்தில், நான்கு உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட 700 மெகாவாட் திறன் கொண்ட அழுத்த கன நீர் உலைகள் (IPHWR-700) இடம்பெறும்.
- நாடு முழுவதும் பத்து ஒத்த 700 மெகாவாட் திறன் கொண்ட அணு உலைகளை உருவாக்க இந்தியாவின் ஃப்ளீட் மோட் உத்தியின் (ஒரே நேரத்தில் பல்வேறு உலைகளைக் கட்டமைத்தல்) கீழ் MBRAPP உருவாக்கப்பட்டு வருகிறது.
- இராஜஸ்தானின் பலோடியில் அமைக்கப்பட்டுள்ள RSDCL நோக் சூரிய சக்திப் பூங்காவையும் பிரதமர் திறந்து வைத்தார்.
- இது NTPC நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட 735 மெகாவாட் திறன் உட்பட மொத்தம் 925 மெகாவாட் கொள்ளளவைக் கொண்டுள்ளது.
- இந்த சூரிய சக்திப் பூங்கா ஆனது புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியை மேம்படுத்தும் மற்றும் கார்பன் வெளியேற்றத்தைக் குறைக்கப் பங்களிக்கும்.

## இந்திய மறுவாழ்வு சபையின் புதிய உறுப்பினர்




- மத்திய அரசானது, மக்களவை உறுப்பினர் கன்வர் சிங் தன்வர் மற்றும் மாநிலங்களவை உறுப்பினர் டாக்டர் ஜஷ்வந்த் சிங் பர்மர் ஆகியோரை இந்திய மறுவாழ்வு சபையின் (RCI) உறுப்பினர்களாக நியமித்துள்ளது.
- 1992 ஆம் ஆண்டு இந்திய மறுவாழ்வு சபை சட்டத்தின் கீழ் அவர்களின் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டன.
- அறிவிப்புத் தேதியிலிருந்து அல்லது அடுத்த உறுப்பினர்கள் நியமிக்கப்படும் வரை, இவற்றில் எது நீண்டதோ அதுவரை அவர்கள் இரண்டு ஆண்டுகள் பதவியில் இருப்பார்கள்.

## “பிரயாஸ்” நரம்பியல் மறுவாழ்வு மையம்

- ஆயுஷ் அமைச்சகமானது, கோவாவில் உள்ள அகில இந்திய ஆயுர்வேத நிறுவனத்தில் “பிரயாஸ்” எனப்படும் அதன் முதல் வகையான ஒருங்கிணைந்த நரம்பியல் மறுவாழ்வு

மையத்தினைத் தொடங்கியது.

- 10வது ஆயுர்வேத தினத்தை முன்னிட்டு மத்திய அமைச்சரால் இந்த மையம் திறந்து வைக்கப்பட்டது.
- “பிரயாஸ்” ஆனது ஆயுர்வேதம், உடலியக்க மருத்துவம், யோகா, பேச்சு சிகிச்சை, செயல்முறை மருத்துவம் மற்றும் குழந்தை நரம்பியல் மற்றும் மேம்பாட்டுப் பராமரிப்புக்கான நவீன குழந்தை மருத்துவத்தை ஒருங்கிணைக்கிறது.
- நரம்பியல் சார்ந்த குறைபாடுகளை எதிர்கொள்ளும் குழந்தைகளை மையமாகக் கொண்டு முழுமையான, ஒருங்கிணைந்த மற்றும் ஆதார அடிப்படையிலான நரம்பியல் மறுவாழ்வை வழங்குவதே இந்த மையத்தின் நோக்கமாகும்.




## AFSPA சட்டத்தின் நீட்டிப்பு 2025




- உள்துறை அமைச்சகமானது மணிப்பூர், நாகாலாந்து மற்றும் அருணாச்சலப் பிரதேசத்தின் சில பகுதிகளில் ஆயுதப்படைகள் (சிறப்பு அதிகாரங்கள்) சட்டத்தினை 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 01 ஆம் தேதி முதல் மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டித்தது.
- மணிப்பூரில், ஐந்து பள்ளத்தாக்கு மாவட்டங்களைத் தவிர மாநிலம் முழுவதும் இந்தச் சட்டம் பொருந்தும்.
- நாகாலாந்தில், ஒன்பது மாவட்டங்களில் AFSPA நீட்டிக்கப்பட்டுள்ளது.

- அருணாச்சலப் பிரதேசத்தில், அசாம் எல்லைக்கு அருகிலுள்ள திராப், சாங்லாங், லாங்டிங் மற்றும் நம்சாய் மாவட்டத்தின் சில பகுதிகளில் AFSPA சட்டம் இன்னும் நடைமுறையில் உள்ளது.
- இந்தச் சட்டமானது ஆயுதப்படைகளுக்கு அதன் பலத்தைப் பயன்படுத்துவதற்கும், பிடியாணை இல்லாமல் கைது செய்வதற்கும், அறிவிக்கப்பட்ட பிரச்சினை மிகுந்த பகுதிகளில் சட்டப்பூர்வப் பாதுகாப்புத் திறனை வழங்குவதற்குமான அதிகாரங்களை வழங்குகிறது.
- மணிப்பூரில் 1981 ஆம் ஆண்டு முதல் AFSPA அமலில் உள்ளது என்பதோடு மேலும் அதன் விதிகள் ஆனது முன்னதாக 2022 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் பல பள்ளத்தாக்குப் பகுதிகளில் இருந்து திரும்பப் பெறப்பட்டன.


## கடல்சார் துறைக்கான நான்கு பிரிவு சார்ந்த உத்தி




- இந்தியாவின் கப்பல் கட்டுதல் மற்றும் கடல்சார் துறையை புத்துயிர் பெறச் செய்வதற்கான விரிவான நான்கு பிரிவு சார்ந்த உத்திக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- கப்பல் கட்டும் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக 24,736 கோடி ரூபாய் மூல தனத்துடன் கப்பல் கட்டும் நிதி உதவித் திட்டத்தினை (SBFAS) 2036 ஆம் ஆண்டு வரை நீட்டிப்பதில் முதல் பிரிவு கவனம் செலுத்துகிறது.
- இரண்டாவது பிரிவானது நீண்ட கால நிதியுதவி வழங்கவும் கடன் வாங்கும் செலவுகளைக் குறைக்கவும் 25,000 கோடி ரூபாய் மதிப்புள்ள கடல்சார் மேம்பாட்டு நிதியை (MDF) அறிமுகப்படுத்துகிறது.
- மூன்றாவது பிரிவானது 19,989 கோடி ரூபாய் செலவிலான கப்பல் கட்டும் மேம்பாட்டுத் திட்டம் ஆகும்.
- இது இந்தியாவின் கப்பல் கட்டும் திறனை ஆண்டுதோறும் மொத்தம் 4.5 மில்லியன் டன்னாக விரிவுபடுத்துவதையும் உள்கட்டமைப்பு வளர்ச்சியை ஆதரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நான்காவது பிரிவானது கொள்கைச் சீர்திருத்தங்கள், திறன் மேம்பாடு மற்றும் இந்த முன்னெடுப்புகளை மேற்பார்வையிடவும் ஒருங்கிணைக்கவும் ஒரு தேசிய கப்பல் கட்டும் திட்டத்தினை நிறுவுதல் ஆகியவற்றை உள்ளடக்கியது.

# சர்வதேசச் செய்திகள்

## அமெரிக்காவின் மருந்து மீதான வரிகள்




- இறக்குமதி செய்யப்பட்ட "நிறுவனப் பெயரின் முத்திரையிடப்பட்ட மற்றும் காப்புரிமை பெற்ற மருந்துத் தயாரிப்புகளுக்கு" 100% வரி விதிக்க உள்ளதாக அமெரிக்க அதிபர் அறிவித்தார்.
- இந்தியா, பெல்ஜியம், இத்தாலி மற்றும் சீனா ஆகியவை பெரும்பாலும் பொது மருந்துப் பிரிவுகளில் அமெரிக்காவிற்கு மருந்துகளை ஏற்றுமதி செய்கின்றன.
- உலகின் மருந்தகம் என்று அழைக்கப்படும் இந்தியா, 5.71% என்ற உலகளாவியச் சந்தைப் பங்கைக் கொண்ட உலகின் மிகப்பெரிய மருந்து ஏற்றுமதியாளர்களில் ஒன்றாகும்.
- 10 பில்லியன் டாலர் மதிப்புள்ள (FY25) ஏற்றுமதியில் சுமார் 35% பங்கினைக் கொண்டு இந்தியாவின் மிகப்பெரிய மருந்துச் சந்தையாக அமெரிக்கா உள்ளது.
- அமெரிக்காவிற்கு வெளியே வேறொரு நாட்டில் தொழிற்சாலைகளைக் கொண்ட அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாக (USFDA) அமைப்பின் விதிகளுக்கு இணக்கமான நிறுவனங்களும் இந்தியாவில் அதிக எண்ணிக்கையில் அமைந்துள்ளன.
- மருந்து உற்பத்தியில் இந்தியா உலகளவில் 3வது இடத்திலும், மதிப்பு ரீதியாக 11வது இடத்திலும் உள்ளது என்பதோடு மேலும் உலகளாவியத் தடுப்பூசிகளில் இந்தியா 60% பங்களிக்கிறது.

## துருக்கி மற்றும் அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம்

- துருக்கி நாடானது அமெரிக்காவுடன் உத்தி சார் முக்கியத்துவம் வாய்ந்த பொது அணுசக்தி ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- இந்த ஒப்பந்தத்தில் பெரிய அளவிலான அணு மின் நிலையங்கள் மற்றும் சிறிய அணு உலைகள் (SMRs) திட்டங்கள் அடங்கும்.
- இது துருக்கியின் அணுசக்தி திறனை விரிவுபடுத்துவதையும் இருதரப்பு எரிசக்தி உறவுகளை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ரஷ்யாவுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் 20 பில்லியன் டாலர் அக்குயு அணுமின் நிலையத் திட்டம் மற்றும் மொத்தம் 75.8 பில்லியன் கன மீட்டர் அளவிலான சமீபத்திய

LNG ஒப்பந்தங்கள் உட்பட எரிசக்தி ஆதாரங்களை பல்வகைப்படுத்துவதற்கான துருக்கியின் பரந்த உத்தியைத் தொடர்ந்து இது மேற்கொள்ளப் பட்டுள்ளது.




## ஈரான்-ரஷ்யா அணுசக்தி ஒப்பந்தம்




- தெற்கு ஈரானின் ஹார்மோஸ்கன் மாகாணத்தில் மொத்தம் 5 GW திறன் கொண்ட நான்கு அணு உலைகளை உருவாக்குவதற்காக ஈரான் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் 25 பில்லியன் டாலர் மதிப்பிலான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- இந்தத் திட்டமானது ஈரானின் மின் தேவையை, குறிப்பாக உச்ச கட்ட மின் தேவையின் போது மின்சாரப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- ரஷ்யாவின் ரோசட்டம் நிறுவனமானது இவற்றின் கட்டுமானப் பணிகளை முன்னெடுத்து மேற்கொள்ளும் என்பதோடு ஈரான் தற்போது புஷேரில் ரஷ்யாவால் கட்டப்பட்ட 1 ஜிகாவாட் திறன் கொண்ட அணுமின் நிலையம் ஒன்றைக் கொண்டு உள்ளது.
- ஈரானின் அணுசக்தித் திட்டம் தொடர்பான தடைகளைத் தாமதப்படுத்துவது குறித்த ஐ.நா. பாதுகாப்புச் சபையின் வாக்கெடுப்புக்கு மத்தியில் இந்த ஒப்பந்தம் மேற் கொள்ளப் பட்டுள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## MiG-21 விமானத்தின் இறுதிச் செயல்பாட்டு விழா


- சண்டிகர் விமானப்படை நிலையத்தில் நடைபெற்ற அதன் ஒரு செயல்பாட்டு நீக்க விழாவின் போது MiG-21 போர் விமானங்கள் கடைசியாக வானில் பறந்தன.
- MiG-21 இந்தியாவின் முதல் அதி மீயொலி வேகத்திலான போர் விமானம் மற்றும் இடைமறிப்பு விமானமாகும் என்பதோடு இது 1960 ஆம் ஆண்டுகளில் படையில் சேர்க்கப்பட்டது.
- போர்த் திறனை மேம்படுத்துவதற்காக இந்திய விமானப்படையால் 870க்கும் மேற்பட்ட MiG-21 விமானங்கள் படையில் சேர்க்கப்பட்டன.
- 1965 மற்றும் 1971 ஆம் ஆண்டுகளில் பாகிஸ்தானுடனான போர்கள், 1999 கார்கில் மோதல் மற்றும் 2019 ஆம் ஆண்டு பாலகோட் வான்வழித் தாக்குதல்களில் இந்த ஜெட் விமானங்கள் முக்கியப் பங்கு வகித்தன.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## "Planetary Health Check 2025" அறிக்கை

- "Planetary Health Check 2025" அறிக்கையானது, முதல் முறையானப் பெருங்கடல் அமில மயமாக்கல் உட்பட புவிக்கான ஒன்பது வரம்புகளில் ஏழு வரம்புகள் தற்போது மீறப் பட்டுள்ளதாகக் குறிப்பிடுகிறது.
- மீறப்பட்ட வரம்புகள்: பருவநிலை மாற்றம், உயிர்க்கோள ஒருங்கிணைப்பு, நில அமைப்பு மாற்றம், நன்னீர் பயன்பாடு, உயிர்ப் புவி வேதியியல் செயல்பாட்டின் இயக்கங்கள், புதிய அமைப்புகள் மற்றும் புதிதாகச் சேர்க்கப்பட்ட பெருங்கடல் அமில மயமாக்கல் ஆகியனவாகும்.
- ஓசோன் சிதைவு மற்றும் தூசிப் படல அதிகரிப்பு ஆகியவை மட்டுமே பாதுகாப்பான வரம்புகளுக்குள் உள்ளன.
- தொழில்துறை காலக் கட்டத்திலிருந்துப் பெருங்கடல் அமிலமயமாக்கல் 30 முதல் 40% அதிகரித்துள்ளது.





## வனம் தொடர்பான சுற்றுச்சூழல் கணக்கெடுப்பு 2025 அறிக்கை


- "வனம் தொடர்பான சுற்றுச்சூழல் கணக்கெடுப்பு - 2025" அறிக்கையானது புள்ளி விவரங்கள் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தினால் (MoSPI) தொகுக்கப் பட்டு வெளியிடப்பட்டது.
- 2010–11 முதல் 2021–22 ஆம் ஆண்டு வரை இந்தியாவின் வனப்பகுதி 17,444.61 சதுர கிலோ மீட்டர் அதிகரித்துள்ளது.
- இது மொத்தப் புவியியல் பரப்பளவில் 7.15 லட்சம் சதுர கிலோமீட்டர் அல்லது 21.76 சதவீதத்தினை எட்டியுள்ளது.
- கேரளா, கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் முறையே 4,137, 3,122 மற்றும் 2,606 சதுர கிலோமீட்டர் வனப்பகுதி அதிகரிப்புடன் அதிக அளவில் வனப் பகுதி பதிவாகியுள்ளது.
- உத்தரக்காண்ட், ஒடிசா மற்றும் ஜார்க்கண்ட் ஆகியவை பதிவு செய்யப்பட்ட வனப் பகுதி பங்கீட்டில் முறையே 6.3%, 1.97% மற்றும் 1.9% பங்குடன் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் கொண்டுள்ளன.
- 2013 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 7.32% அதிகரிப்புடன் 305.53 மில்லியன் கன மீட்டர் அதிகரித்துள்ளதுடன், இந்தியாவின் அதிகரித்து வரும் மரங்களின் எண்ணிக்கை, பயன்படுத்தக் கூடிய மர அளவைக் குறிக்கிறது.
- மரங்களின் அதிகரிப்புக்கு மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர் மற்றும் தெலுங்கானா ஆகியவை முறையே 136, 51 மற்றும் 28 மில்லியன் கன மீட்டர் பங்களித்தன.
- 2011–12 ஆம் ஆண்டில் 30.72 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் இருந்த காடுகளிலிருந்து பெறப்படும் சேவைகள் ஆனது 2021–22 ஆம் ஆண்டில் 37.93 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்ந்தன என்ற நிலையில் இது தற்போதைய விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 0.16% ஆகும்.
- மகாராஷ்டிரா, குஜராத் மற்றும் கேரளா ஆகியவை முறையே 23.78 ரூபாய், 14.15 ரூபாய் மற்றும் 8.55 ஆயிரம் கோடிகள் ரூபாயுடன் சேவை வழங்கீட்டில் மிகவும் முன்னணிப் பங்களிப்பாளர்களாக உள்ளன.
- 2015–16 ஆம் ஆண்டில் 409.1 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்த கார்பன் தக்கவைப்பு

சீர்முறைச் சேவைகள் ஆனது 2021–22 ஆம் ஆண்டில் 620.97 ஆயிரம் கோடி ரூபாயாக 51.82% அதிகரித்துள்ளன.

- அருணாச்சலப் பிரதேசம், உத்தரக்காண்ட் மற்றும் அசாம் ஆகியவை முன்னணி பங்களிப்பாளர்களாக உள்ளதுடன், 2021–22 ஆம் ஆண்டில் சீர்முறை சேவைகளின் மதிப்பு ஆனது நடப்பு விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.63% ஆக இருந்தது.





## இந்தியாவில் குழந்தைத் திருமணங்கள் குறித்த யுனிசெஃப் அறிக்கை




- ஆந்திரப்பிரதேசத்தில் குழந்தை திருமணத்தின் பரவல் 33 சதவீதத்திலிருந்து (NFHS-4) 29.3% (NFHS-5) ஆகவும், இராஜஸ்தானில் 35.4 சதவீதத்திலிருந்து 25.4% ஆகவும் குறைந்து உள்ளது.
- 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 12,400க்கும் மேற்பட்ட கிராமங்கள் குழந்தை திருமணம் இல்லாதவையாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் ஒடிசா தனது "குழந்தைத் திருமண முறையில்லா கிராமம்" முன்னெடுப்பினை விரிவுபடுத்தியுள்ளது.
- திட்டத்தில் முன்னேற்றம் இருந்த போதிலும், இந்தியாவில் ஆண்டுதோறும் 18 வயதுக்கு உட்பட்ட சுமார் 1.5 மில்லியன் பெண்களுக்குத் திருமணம் செய்து வைக்கப்படுகிறது என்பதோடு மேலும் இங்கு 15 முதல் 19 வயதுடைய பெண்களில் 16% பேர் தற்போது திருமணமானவர்கள் ஆவர்.
- யுனிசெஃப்–UNFPA உலகளாவியத் திட்டம் ஆனது கல்வி, சுகாதாரம், குழந்தைப் பாதுகாப்பு மற்றும் துப்புரவு ஆகியவற்றினை ஒருங்கிணைத்து மூலக் காரணங்களைப் பெருமளவில் நிவர்த்தி செய்கிறது.

# மாநிலச் செய்திகள்

## நிலையான மலை மேம்பாட்டு உச்சி மாநாடு




- 12வது நிலையான மலை மேம்பாட்டு உச்சி மாநாடு ஆனது உத்தரகாண்டின் டேராடூனில் நடைபெற்றது.
- இந்த உச்சி மாநாடு ஆனது ஒருங்கிணைந்த மலை முன்னெடுப்பினால் ஏற்பாடு செய்யப் பட்டது.
- இது பருவநிலை மாற்றம், பேரிடர் அபாயங்கள் மற்றும் இமயமலைப் பகுதியில் நிலையான மேம்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்தியது.
- தேசிய அளவிலான மலைக் கொள்கை அமைப்புகளை உருவாக்குதல், இடர்களுக்கு ஏற்ற நடவடிக்கை எடுப்பதற்கான திட்டமிடல் மற்றும் பங்கேற்பு சார்ந்த நிர்வாக மாதிரிகள் ஆகியவை முக்கியப் பரிந்துரைகளில் அடங்கும்.
- உள்ளடக்கிய மற்றும் நிலையான மலை மேம்பாட்டுக்கான உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தும் "டேராடூன் பிரகடனம்" ஏற்றுக் கொள்ளப் பட்டதுடன் இந்த உச்சி மாநாடு நிறைவடைந்தது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்


## தேசிய புவி அறிவியல் விருதுகள் 2024

- புது டெல்லியில் உள்ள இராஷ்டிரபதி பவன் கலாச்சார மையத்தில் இந்திய குடியரசுத் தலைவர் 2024 ஆம் ஆண்டிற்கான தேசியப் புவி அறிவியல் விருதுகளை வழங்கினார்.
- புவி அறிவியல் துறையில் மகத்தான சாதனைகளை அங்கீகரிப்பதற்காக இந்திய அரசின் சுரங்கத் துறை அமைச்சகத்தினால் 1966 ஆம் ஆண்டில் இந்த விருதுகள் நிறுவப் பட்டன.
- மொத்தம் 20 புவி அறிவியலாளர்கள் ஒரு வாழ்நாள் சாதனையாளர் விருது மற்றும் ஒரு இளம் புவி அறிவியலாளர் விருது உட்பட மூன்று பிரிவுகளின் கீழ் 12 விருதுகளைப் பெற்றனர்.
- நில அதிர்வியல் மற்றும் ஆய்வு சார் புவி இயற்பியலில் அவரது பங்களிப்புகளுக்காக ஷியாம் சுந்தர் ராய்க்கு 2024 ஆம் ஆண்டிற்கான வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப் பட்டது.

- இந்தியப் புவியியல் ஆய்வகத்தின் மூத்தப் புவியியலாளர் சுசோபன் நியோகிக்கு மேகாலயா, ஜார்க்கண்ட் மற்றும் பண்டேல்கண்ட் போன்ற பகுதிகளில் கண்டத் தட்டுகளின் பரிணாமம் தொடர்பான அவரது பணிக்காக 2024 ஆம் ஆண்டிற்கான இளம் புவி அறிவியல் விருது வழங்கப்பட்டது.




## ஜல் சஞ்சய் ஜன் பாகீதாரி விருது




- கர்நாடகாவின் பிடார் மாவட்டம் சிறந்த நீர் வளங்காப்பு முன்னெடுப்புகளுக்காக ஜல் சக்தி அபியான்: மழைநீர் சேமிப்புப் பிரச்சாரத்தின் கீழ் மத்திய அரசின் ஜல் சஞ்சய் ஜன் பாகீதாரி விருதை வென்றுள்ளது.
- இந்த பிரச்சாரத்தின் மூன்றாம் வகையின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 80 மாவட்டங்களில் பிடார் மாவட்டமும் ஒன்றாகும் என்பதோடு மேலும் இந்த விருதினை வென்ற ஒரே கல்யாண கர்நாடகா பிராந்தியத்தினைச் சேர்ந்த மாவட்டமும் இதுவே ஆகும்.
- கர்நாடகாவில் இருந்து மொத்தம் ஆறு மாவட்டங்கள் இந்த விருதைப் பெற்றன.
- இந்தப் பிரச்சாரம் ஆனது இந்தியா முழுவதும் சமூக அமைப்புகளால் மேற்கொள்ளப் படும் நீர் வளங்காப்பு மற்றும் நிலத்தடி நீர் மீளேற்ற நடவடிக்கைகளை

ஊக்குவிக்கிறது.

❖ பிடார் மாவட்டத்தின் முன்னெடுப்புகளில் பின்வருவன அடங்கும்:
  - சிறிய தடுப்பணைகள், கட்டுமானப் பாளத்திற்கான சட்ட கட்டமைப்புகள், ஓடைத் தடுப்புகள், கசிவு நீர்க் குட்டைகள் மற்றும் ஊறுகுழிகள் ஆகியவற்றின் கட்டுமானம்.
  - டாங்கா எனப்படும் நிலத்தடி மழை நீர்ச் சேமிப்பு அமைப்புகள் மற்றும் படிக் கிணறுகள் போன்ற பாரம்பரிய மழை நீர்ச் சேமிப்பு முறைகளைப் பயன்படுத்துதல்.
  - MGNREGA திட்டத்தின் கீழ் வண்டல் பதிவு நீக்கும் பணிகள் மற்றும் வேளாண் வயல்களில் அகழிகள் அமைத்தல்.

## முக்கிய தினங்கள்

### உணவு இழப்பு மற்றும் வீணாதல் குறித்த சர்வதேச விழிப்புணர்வு தினம் 2025 - செப்டம்பர் 29




❖ இது உலகளாவிய அளவில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், விநியோகச் சங்கிலி முழுவதும் உணவு இழப்பு மற்றும் வீணாவதைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ 2030 ஆம் ஆண்டுக்குள் உணவு வீணாவதை பாதியாகக் குறைத்து இழப்புகளைக் குறைப்பதற்கான SDG இலக்கு 12.3 ஐ இது ஆதரிக்கிறது.

❖ 2025 ஆம் ஆண்டுக்கான கருத்துரு:" Stop food loss and waste. For the people. For our planet."

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★